# அரசறிவியல்

## சமூகவியல் அணுகுமுறை



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

தேர்ச்சி மட்டம் :- 1.4 அரசியலைக் கற்பதற்கான அணுகுமுறைகள்

## 1.4.6 சமூகவியல் அணுகுமுறை



ஒரு விடயத்தை அலகுவாகவும் தெளிவாகவும் விளக்குவதற்கு பயன்படுவது அணுகுமுறை ஆகும். அந்தவகையில் அரசறிவியலில் உள்ள விடயங்களை இலகுவாகவும் தெளிவாகவும் விளங்குவதற்கு அரசறிவியலுக்கான அணுகுமுறைகள் பயன்படுகின்றது.

அந்தவகையில் அரசறிவியலோடு நெருக்கமான அணுகுமுறையாக சமூகவியல் அணுகுமுறை விளங்குகின்றது. இது **நவீன அணுகுமுறை** ஆகும்.

**சமூகவியல் அணுகுமுறை** என்பது "சமூக நிறுவனங்களையும் தனிமனிதர்களையும், சமூக குழுக்களையும் முதன்மைப்படுத்தி ஆய்வு செய்யும் முறையே" ஆகும்.

### அரசறிவியலுக்கும் சமூகவியலுக்கும் இடையிலானத் தொடர்புகள்

ஆரம்பகாலத்தில் அரசறிவியலுக்கும் சமூகவியலுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தாலும் 19ம் நூற்றாண்டில் அமெரிக்க பல்கலைக்கழகத்தில் பிரிக்கப்பட்டு 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்விரண்டும் ஒன்றிலிருந்து மற்றையது பிரிந்து செயற்படலாயின. ஆனாலும் இவ்விரு பாடங்களுக்கு இடையில் இடைவினைத்தொடர்புகள் காணப்படுகின்றன. இதன் விளைவாக **"அரசியல் சமூகவியல்"** *(Political Sociology)* என்ற பாடம் உருவாகியது. தற்போது பல்கலைக்கழகங்களில் அரசறிவியல் துறையிலும், சமூகவியல் துறையிலும் ஒரு பாடமாக கற்கப்படுகின்றது.


ஆகஸ்ட்கொம்டே

20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் நவீன அரசறிவியலினதும் சமூகவியல் கோட்பாட்டின் முன்னோடிகளாக **ஆகஸ்ட்கொம்டே** *(Augustcompte)*, **காள்மாக்ஸ், மெக்ஸ்வெபர்** விளங்குகின்றார்.

20ம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் **பென்க்பேர்ட்** என்பவர் திறமையான ஆய்வாளர் குழுவொன்றுடன் குருகுல கல்வியை ஆய்வு செய்து அரசறிவியல், சமூகவியல் இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது என்றனர்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சமூகவியல் மற்றும் மானிடவியலில் ஏற்பட்ட தாக்கத்தினை அரசறிவியல் செய்முறைகளின் கோட்பாட்டு பகுதியில் காணமுடிகின்றது.

அரசறிவியலில் கற்கும் சில விவகாரங்கள் மற்றும் கருப்பொருட்கள் பற்றி சமூகம் தொடர்பான ஆழமான, பரந்ததுமான அறிவைப் பெறுவதற்கு சமூகவியல் அணுகுமுறை பயன்படுகின்றது.
[உ+ம்] அரசியல் கட்சிகள் தொடர்பான விடயங்கள்

## சமூகவியல் அணுகுமுறையின் நன்மைகள்

- சமூகம் சார்ந்து நாட்டின் அரசியல் கலாசாரம் கட்டியெழுப்பப்படுவதற்கு உதவுகின்றது.
- **"அரசியல் சமூகவியல்"** என்ற புதிய கற்கைநெறி உருவாக இவ்வணுகுமுறை

## சமூகவியல் அணுகுமுறையின் தீமைகள்

- சில சமூக நிறுவனங்களும் குழுக்களும் தமது கொள்கையை மக்கள் மீது திணிக்க இவ்வணுகுமுறையை ஊடகமாக பயன்படுத்த முற்படலாம்.
- பெரும்பாண்மை சமூகத்திற்கு சாதகமாக அமைந்துவிடலாம்.

## வினாக்கள்

1) சமூகவியல் அணுகுமுறைகளை ஆதரித்த இரு அறிஞர்களின் பெயர்களை குறிப்பிடுக.
2) சமூகவியல் அணுகுமுறைகளின் நன்மைகள் இரண்டினை குறிப்பிடுக.
3) அரசியல் சமூகவியல் அணுகுமுறையின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி).
கணினி வடிவமைப்பு :- திரு.பா.சாயிரூபன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk